# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 7

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. கதிரவனை நோக்கித் தவங்கிடப்பது

அ) அல்லிப்பூ ஆ) கார்த்திகைப்பூ இ) சூரியகாந்திப்பூ ஈ) தாழம்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குளத்தில் மலரும் பூ

அ) மல்லிகை ஆ) கனகாம்பரம் இ) ஆம்பல் ஈ) கார்த்திகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அரசன் என்பதன் எதிர்ப்பாற் சொல் அரசி போல, இடையன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

அ) இடைச்சி ஆ) இறைவி இ) தலைவி ஈ) இயைச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. எழிலன் கீழே இருந்த பொருட்களை எடுத்துப் பெட்டியில் போட்டான். எடுத்து என்பது

அ) பெயரெச்சம் ஆ) வினைமுற்று இ) பெயர்ச்சொல் ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. புகழேந்திப் புலவர் தொண்டை நாட்டிலே பொன் விளைந்த களத்தூரிலே தோன்றினார். விளைந்த என்பது

அ) வினைச்சொல் ஆ) பெயர்ச்சொல் இ) வினைமுற்று ஈ) பெயரெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் பெற்றுவரும் சொல்லியம்

அ) கலப்புச் சொல்லியம் ஆ) தனிச்சொல்லியம்

இ) தொடர்ச்சொல்லியம் ஈ) வினாச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கஞ்சமகள் வந்து சிரிக்கிறாள். கஞ்சமகள் என்பது

அ) சம்பங்கிப்பூ ஆ) மல்லிகைப்பூ இ) மகிழம்பூ ஈ) தாமரைப்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. புலவர் உள்ளத்தில் புளகாங்கிதம் பிறக்கிறது. புளகாங்கிதம் என்பது

அ) வெறுப்பு ஆ) கருணை இ) இரக்கம் ஈ) உளமகிழ்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தம்பி மளமளவென்று கணித பாடத்தைச் செய்தபின், சுடச்சுட தோசை உண்டான். இதில் வந்த அடுக்குத்தொடர்

அ) மளமள ஆ) கணித இ) சுடச்சுட ஈ) தோசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. வன்னியில் கயிலைவன்னியன் ஆண்ட பற்று

அ) பனங்காமம் ஆ) முள்ளியவளை இ) உடையார்கட்டு ஈ) கல்மடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நல்லவர் ஒருவருக்குச் செய்த உதவி இது போன்றது

அ) காற்றில் எழுதியது ஆ) கல்லில் எழுதியது

இ) நீரில் எழுதியது ஈ) மண்ணில் எழுதியது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மோசிகீரனார் களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் படுத்து

அ) உரங்கினார் ஆ) உறங்கினார் இ) உரங்கிணார் ஈ) உறங்கிநார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தாமரைக்குளத்தில் வெள்ளைத் தாமரைகள் மலர்ந்திருந்தன. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள அடைமொழி

அ) தாமரை ஆ) குளம் இ) மலர் ஈ) வெள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'வன்னிக்' குறிப்பு எனும் நூலை எழுதியவர்

அ யே. வை லூயிசு ஆ) வை.யே லூயிசு இ) யே.பி லூயிசு ஈ) யே.வி லூயிசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இலக்கிய இன்பத்தில், முகிலைக் கிழித்துப் பாய்ந்த மீன்

அ) வரால்மீன் ஆ) வானமீன் இ) வயல்மீன் ஈ) வாளைமீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மோசிகீரனாருக்குப் பணிவிடை செய்த மன்னன்

அ) சேரன் ஆ) பாண்டியன் இ) சோழன் ஈ) பாரி

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

17. தான் சேர்ந்தவரை அழிக்கும் பொருள்

அ) வெள்ளம் ஆ) சினம் இ) பேய் ஈ) அச்சம்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

18. யாழ்ப்பாண அரசு எத்தனையாம் நூற்றாண்டில் வலிமை பெற்றிருந்தது?

அ) பன்னிரண்டாம் ஆ) பதின்மூன்றாம் இ) பத்தாம் ஈ) பதினான்காம்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

19. மூதுரை பாடிய புலவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர் இ) நாலடியார் ஈ) பாரதியார்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

20. றொபேர்ட் நொக்சு கண்ட அனுராதபுரம்

அ) வேடர் நகரம் ஆ) சிங்களவர் நகரம் இ) தமிழர் நகரம் ஈ) காடு

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

21. **தடங்கரை** எனும் பதத்தைப் பிரித்தால் வருவது

அ) தடங் + கரை ஆ) தட + கரை இ) தடம் + கரை ஈ) தடங்கு + கரை

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

22. வன்னியின் வீரம் காட்டிய அரசகுலப் பெண்களில் இவளும் ஒருத்தி

அ) வன்னிநாச்சியார் ஆ) சிதம்பரநாச்சியார்

இ) வெள்ளைநாச்சியார் ஈ) வீரநாச்சியார்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

23. வினைச்சொல்லின் சிறப்பிலக்கணம்

அ) எழுவாயை ஆ) செயப்படுபொருளை

இ) அடைமொழியை ஈ) காலத்தை காட்டும்.

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

24. மருதுபாண்டியன் வாழ்ந்த ஊர்

அ) எட்டயபுரம் ஆ) தோமையாபுரம்

இ) தோணிபுரம் ஈ) விழுப்புரம்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

25. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் எத்தனை இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

அ) மூன்று ஆ) ஐந்து இ) ஏழு ஈ) ஏழு

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

26. தொடருந்துச் செலவர்கள் ஒருவரோடு ஒருவர் இடிபட்டு விழுந்து எழும்பினர்.
விழுந்து என்பது
அ) வினைமுற்று ஆ) தொழிற்பெயர் இ) பெயர்ச்சொல் ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இலங்கையில் பெருமளவு ஈமத்தாழிகன் காணப்படும் இடம்
அ) மன்னார் ஆ) கொழும்பு இ) வன்னி ஈ) பொம்பரிப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இலங்கையின் வரலாற்று உறவுகள் என்ற நூலை எழுதியவர்
அ) றொபேட் வில்லியம் ஆ) றொபேட் நொக்சு
இ) றொபேட் எட்வின் ஈ) யோன் றொபேட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நண்பனைக் காணாது புலவரின் ஆவி பிரிந்தது. ஆவி என்பதன் சொற்பொருள்
அ) உடல் ஆ) மேனி இ) மெய் ஈ) உயிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் எனத்தொடங்கும் அறநெறிப்பாடலை எழுதிய புலவர்
அ) நாலடியார் ஆ) திருவள்ளுவர் இ) சின்னத்தம்பி ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பின்வரும் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டவர்களுள் முன்நின்றவன் பாஞ்சாலங் குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன். கட்டபொம்மன் அஞ்சாமையும் தன்மானமும் நிறைந்த பெருவீரன். தமிழீழத்து வன்னி மன்னன் பண்டாரவன்னியனைப் போல இவனும் இறுதிவரை ஆங்கிலேயருக்குத் திறை செலுத்த மறுத்தான். அதனால் சினங்கொண்ட ஆங்கிலேயர் கடும்போர் தொடுத்தனர். இருந்தும் அவர்களால் கட்டபொம்மனை வெற்றிகொள்ள முடியவில்லை. கட்டபொம்மன் பண்டாரவன்னியனின் படைத் துணையுடன் ஆங்கிலப்படைகளை வெற்றிகொண்டான். இறுதியில் ஆங்கிலேயர் இரண்டகனான எட்டப்பன் துணையுடன் சூழ்ச்சியால் அவனைச் சிறைப்பிடித்தனர். திறைசெலுத்தினால் அவனை மன்னித்துவிடுவதாக ஆங்கிலேயர் கூறினர். எனினும், கட்டபொம்மன் மரணத்தைவிட மானம் பெரிதென திறைசெலுத்த மறுத்தான். அதனால் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். அவன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் அவனது நடுகல் இன்றுமுள்ளது. அதை மக்கள் போற்றி வணங்கி வருகின்றனர்.

1. தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டவன் யார்?

_______________________________________________

_______________________________________________

2. கட்டபொம்மனுக்குப் படையுதவி செய்த தமிழீழ மன்னன் யார்?

_______________________________________________

_______________________________________________

3. எதற்காகக் கட்டபொம்மன் மீது ஆங்கிலேயர் போர் தொடுத்தனர்?

_______________________________________________

_______________________________________________

4. கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தவன் யார்?

_______________________________________________

_______________________________________________

5. கட்டபொம்மன் எதைப் பெரிதென மதித்தான்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10)

**3) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

1. கலைகள் எவ்வுணர்ச்சியின் வெளிப்பாடாகும்?

2. கயிலைவன்னியனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் எங்கெங்கே கோட்டைகள் கட்டினர்?

3. மருதுபாண்டியனைப் பற்றி நீர் எண்ணுவது என்ன?

4. வன்னியின் பண்டைய ஊர்ப்பெயர்களும் குளப்பெயர்களும் காட்டுவது என்ன?

5. வாளைமீன் முகிலைக் கிழித்துப் பாய்ந்த அழகை எழுதுக.

புள்ளிகள் 15)

4) **கீழ்வரும் பாடலைப் படித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

***விண்ணை முட்டும் மலையுச்சியிலே***
***வீழ்ந்து மழைத்துளியாற் பிறந்தேன்***
***மண்ணில் சிறுதுளி பெருவெள்ளமெனும்***
***மாண்பு விளங்கிட ஊற்றெடுத்தே - ஆங்கே***
***குவிந்த மலையிடைப் பள்ளத்திலே***
***கட்டுக் குலையாது நான்வளர்ந்தேன்***
***எட்டாத தூரத்தின் மேலிருந்து - துள்ளி***
***ஏறியிறங்கிப் பாய்ந்து வந்தேன்.***
***பாறை தடுத்திட மோதியெதிர்***
***பாய்ந்து நீர்வீழ்ச்சியாய்த் தொடர்ந்தேன்***
***காட்டு மலைகளின் மீதிருந்து - வாசக்***
***கட்டையும் தட்டையும் காவிவந்தேன்***

1. ஆறு எப்படி நீர்வீழ்ச்சியானது?

________________________________________

________________________________________

2. ஆறு காவி வந்த பொருட்கள் என்ன?

________________________________________

________________________________________

3. எதனால் ஆறு உருவானது?

________________________________________

________________________________________

4. கட்டையும் தட்டும் எங்கிருந்து கிடைத்தன?

________________________________________

________________________________________

5. விண்ணை முட்டும் மலை என்றால் என்ன?

________________________________________

________________________________________

புள்ளிகள் 05)

## 5) கீழே தரப்பட்டுள்ள இலக்கண மொழியியல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. பெயரெச்சம் வினையெச்சம் வினைமுற்று மூன்றிற்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இடம்பெறச் சொல்லியம் ஒன்று எழுதுக.

3. விளையாடினான் இச்சொல்லின் திணை, பால், எண், இடம் என்பவற்றைத் தருக.

4. சலசல, எண்ணிஎண்ணி, மின்னிமின்னி இம்மரபுச் சொற்கள் இடம்பெற சொல்லியங்கள் எழுதுக.

5. தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் தருக.

   1. கடுகதி ______________
   2. அகத்தியம் ______________
   3. திறை ______________
   4. இடுக்கண் ______________
   5. கேணி ______________

புள்ளிகள் 15)

**6) கீழ்வரும் பந்தியை வாசித்து அதனை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

செழித்திருந்த புல்வெளியொன்றில் நான்கு காளைகள் புல் மேய்ந்தன. அவை ஒற்றுமையாக வாழ்ந்தன. கொழுத்திருந்த அக்காளைகளைச் சிங்கமொன்று கண்டது. நேரம் பார்த்து, சிங்கம் ஒரு காளையினைத் தாக்கியது. அப்போது மற்றக் காளைகள் எதிர்த்துத் தாக்கின. சிங்கம் ஓடிவிட்டது. கடும் வெயிலால் நிலம் வறண்டு போன போது காளைகள் உணவின்றி வாடின. காளைகளிடம் இருந்த ஒற்றுமையும் குலைந்தது. அந்த நேரம் பார்த்து, சிங்கம் ஒவ்வொரு காளையாகக் கொன்று தின்றது.

புள்ளிகள் 05)

7) **கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. **மருதுபாண்டினின் கதையை எழுதுக**
2. **தலையைக்காத்த தமிழ் இக்கதையை நீர் விளங்கியபடி எழுதுக.**
3. **வன்னிமக்களுக்கு எவ்வாறு உதவுவோம்?**
4. **தைப்பொங்கல்**

புள்ளிகள் 20)